# இஸ்ரயேலர் வரலாற்றில் இறையிரக்கம்

## முன்னுரை

பழைய ஏற்பாட்டில் இஸ்ரயேலரின் வரலாற்றை மீட்பின் வரலாறாக வாசிக்கின்ற பலருக்கு அதில் இறைவன் மக்களின் பாவங்களுக்குத் தண்டனைத் தருபவராக பல நேரங்களில் தோற்றமளிக்கின்றார். ஆனால் அதைத் தொடர்ந்து அல்லது அதைத்தாண்டி அவர் இரக்கம் உடையவராக இருக்கின்றார் என்பதை பலர் காணத் தவறிவிடுகின்றனர். எனவே இக்கட்டுரையில் இஸ்ரயேலரின் வரலாற்றில் எவ்வாறு மனிதரின் பாவம் – இறைவனின் தண்டனை – அதைத் தொடர்ந்து வருகின்ற அவரின் பேரிரக்கம் எனும் சுழற்சி மீண்டும் மீண்டும் வருகின்றது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் நிறுவ முயன்றுள்ளேன்.

### 1. முதல் பெற்றோருக்கு இரக்கம்

கடவுள் தொடக்கத்தில் உலகைப் படைத்தபோது அனைத்தையும் நல்லது எனக் கண்டார் (காண். தொநூ 1:4, 10, 12, 18, 21, 25), மனிதரைப் படைத்து தம் படைப்பு அனைத்தையும் ஒருங்கே கண்டபோது "அவை மிகவும் நன்றாய்" இருக்கக் கண்டார் (காண். தொநூ 1:31). ஆனால் அவர்கள் பாவம் செய்தபோது (தொநூ 3) இறைவன் நீதியின்படி அவர்களை தண்டிக்கின்றார் (காண். தொநூ 3:16–24). ஆனால் அந்த வேளையிலும் இறைவன் பேரிரக்கத்தோடு செயல்படுகின்றார். "உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும். நீ அதன் குதிங்காலைக் காயப்படுத்துவாய்" (தொநூ 3:15) எனும் "முதல் நற்செய்தி" அல்லது "இறைவாக்குகளுக்கெல்லாம் தாய்" இறைவனின் இரக்கத்தின் வெளிப்பாடேயன்றி வேறில்லை. மேலும் ஆண்டவராகிய கடவுள் அவர்களுக்கு தோல் ஆடைகள் செய்து அணிவித்ததிலும் இறையிரக்கம் வெளிப்படுகின்றது.

### 2. காயினுக்கு காட்டிய இரக்கம்

காயின் ஆபேல் நிகழ்வில் ஆபேலுக்கு அநீதி இழைக்கப்பட்டது (தொநூ 4:8). அதனால் நீதியின்படி காயின் தண்டிக்கப்பட்டாலும் (காண். தொநூ 4:10–12) இறைவன் அவன் மீதும் தனது பேரிரக்கத்தைக் காண்பிக்கின்றார். காயின் இறைவனின் இரக்கத்திற்காக மன்றாடுகின்றபோது (தொநூ 4:13–14) "காயினைக் கொல்கின்ற எவனும் ஏழுமுறை பழிவாங்கப்படுவான்" என்று சொல்லி, காயினைக் கண்டுபிடிக்கும் எவனும் அவனைக் கொல்லாமல் இருக்க ஆண்டவர் அவன்மேல் ஓர் அடையாளம் இட்டார்" (தொநூ 4:15). இவ்வாறு கொலைகாரனும் கொல்லப்படலாகாது, அவனது உயிரும் காப்பாற்றப்படவேண்டும் எனும் இரக்க குணம் உடையவர்தான் நம் இறைவன். இதே நோக்கோடுதான் பிற்காலத்தில் அடைக்கல நகர்களும் ஏற்படுத்தப்பட்டன (காண். யோசு 20).

### 3. வெள்ளப் பெருக்கிற்கு பிறகு பேரிரக்கம்

நோவாவின் காலத்திலும் மக்களின் பாவம் பெருகவே (காண். தொநூ 6:5–6) இறைவன் அவர்களை வெள்ளப் பெருக்கால் அழித்தார் (காண். தொநூ 6–7). இருப்பினும் நோவாவையும் அவரது குடும்பத்தாரையும், தேர்ந்தெடுக்கப்பட்ட விலங்கினங்களையும் ஆண்டவர் காத்தார். வெள்ளப்பெருக்கிற்கு பிறகு, படைப்பின் தொடக்கத்தில் தந்த வாக்குறுதியையும் ஆசீரையும் (காண். தொநூ 1:26) மீண்டும் நோவாவுக்குத் தந்து (காண். தொநூ 9:1), உயிர் வாழ்வனவற்றையும் அவர்கள் உண்ணலாம் எனும் அனுமதியையும் தந்து (காண். தொநூ 9:3), இறுதியாக இனி உலகம் வெள்ளப்பெருக்கால் அழிக்கப்பட மாட்டாது எனும் உடன்படிக்கையின் அடையாளமாய் வானவில்லை வைத்தார் (காண். தொநூ 9:11–13). இவையெல்லாம் இறையிரக்கத்தின், இறைவனின் பேரிரக்கத்தின் அடையாளங்களேயன்றி வேறில்லை.

### 4. ஆபிரகாம் முதல் பெருக்கெடுத்த ஆசீர்

தொடக்க நூலின் மூன்றாம் அதிகாரத்தில் தொடங்குகின்ற முதல் பெற்றோரின் பாவம் சிறிது சிறிதாக வளர்வதைக் காண்கின்றோம். அதாவது பாவம் பெருக்கெடுத்தது. தொடக்க நூலின் பதினோராம் அத்தியாயம் வரை இந்த பாவப் பெருக்கைக் காண்கின்றோம். அதன் உச்சமாய் அமைந்ததுதான் பாபேல் கோபுர நிகழ்வு. அதற்கு தண்டனையாகத் தான் இறைவன் 'மொழியில் குழப்பத்தை உண்டாக்கி' அவர்களைச் சிதறடித்தார் (காண். தொநூ 11:9). அதற்குபிறகு இறைவனின்

பேரிரக்கம் ஆபிரகாமில் வெளிப்படுகின்றது. பாவ பெருக்கிற்கு எதிராக ஆபிரகாமில் ஆசீர் பெருக்கெடுக்கிறதை தொநூ 12–ல் காண்கிறோம் (காண். தொநூ 12:2–3 – இவ்விரு வசனங்களில் ஐந்து முறை 'ஆசீர்' எனும் சொல் பயன்படுத்தப்படுகின்றது). எனவே ஆபிரகாமின் வரலாற்றிலும் பாவம் – தண்டனையைத் தொடர்ந்து இறையிரக்கம் அபரிவிதமாக செயலாற்றுகின்றது.

### 5. சோதோமின் பாவமும் இறையிரக்கமும்

ஆபிரகாமின் காலத்திலும் மீண்டும் பாவம் அதிகமாகியதால் (காண். தொநூ 18–19) இறைவன் சோதோம், கொமோரா நகர்களை அழித்தார் (காண். தொநூ 19:23–29). இருப்பினும் லோத்தையும் அவரது குடும்பத்தையும் காப்பாற்றினார். அப்போது, லோத்து ஆண்டவரின் தூதரிடம் "உங்கள் அடியானுக்கு உங்கள் பார்வையில் இரக்கம் கிடைத்துள்ளது. என் உயிரைக் காக்கும் பொருட்டு நீர் காட்டிய பேரன்பு உயர்ந்தது" (தொநூ 19:19) என்கிறார். ஆக எப்படிப்பட்ட அழிவுச் சூழலிலும் ஆண்டவரின் இரக்கம் செயல்படுகின்றது.

### 6. விடுதலைப் பயணத்தில் இறையிரக்கம்

"எகிப்தில் என் மக்கள் படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன்; அடிமை வேலை வாங்கும் அதிகாரிகளை முன்னிட்டு அவர்கள் எழுப்பும் குரலையும் கேட்டேன்; ஆம், அவர்களின் துயரங்களை நான் அறிவேன்" (விப 3:7) என்று தம் மக்கள் படும் துன்பம் கண்டு இரக்கம் கொண்டு இரங்கி வந்து அவர்களை மீட்ட இறைவன், இந்த விடுதலைப் பயணத்தில் தம்மை, "இரக்கமும் பரிவும் உள்ள இறைவன்; சினம் கொள்ளத் தயங்குபவர்; பேரன்பு மிக்கவர்; நம்பிக்கைக்குரியவர்" (தொநூ 34:6) என வெளிப்படுத்தினார். அத்தகைய இறைவனுக்கு எதிராக இஸ்ரயேல் மக்கள் பொற்கன்று செய்து அதை வழிபட்டு பாவம் செய்தனர். அதனால் கடவுளின் கட்டளைக் கற்களை உடைத்து மோசே அவர்களை தண்டித்தார் (காண். விப 32). ஆனால் இறையிரக்கம் மீண்டும் பொங்கி வழிந்தது. "யார் யாருக்கு நான் பரிவுகாட்ட விரும்புகிறேனோ அவர்களுக்குப் பரிவு காட்டுவேன். யார் யாருக்கு இரக்கம் காட்ட விரும்புகிறேனோ அவர்களுக்கு இரக்கம் காட்டுவேன்" (விப 33:19) என்று கூறி இறைவன் மீண்டும் திருசட்டக் கற்பலகைகளைத் தந்து தனது உடன்படிக்கையை புதுப்பிக்கின்றார் (காண். விப 34).

### 7. இறையிரக்கம் துய்த்துணர்ந்த தாவிது

பேரரசர் தாவிது இறைவன் தனக்கு செய்த நன்மைகளை நினைந்து அவருக்கு நன்றியுடையவராக இல்லாமல் உரியாவின் மனைவியோடு பாவம் செய்தார் (காண். 2 சாமு 11). நாத்தான் இறைவாக்கினர் அதை அவருக்கு சுட்டிக்காட்டியபோது அவர் மனம் வருந்தினார் (காண். 2 சாமு 12). நீதியின்படி ஆண்டவர் தாவீதை தண்டித்தாலும் (காண். 2 சாமு 12:10–12, 14) அவர் மீதும் இரக்கம் கொண்டார். அதனால்தான் தாவீது தனது திருப்பாடலில் இவ்வாறு வேண்டுகின்றார்: "கடவுளே! உமது பேரன்புக்கேற்ப எனக்கு இரங்கும்; உமது அளவற்ற இரக்கத்திற்கேற்ப என் குற்றங்களைத் துடைத்தருளும்" (திபா 51:1).

தாவீது மக்கள் தொகைக் கணக்கெடுத்து மீண்டும் பாவம் செய்தார் (அக்காலத்தில் படைவீரர்களின் எண்ணிக்கையை அறிவதற்காக மக்கள் தொகை கணக்கெடுக்கப்பட்டது. இச்செயல் இறைவன்மீது நம்பிக்கை கொள்ளாமல் படைபலத்தின் மீது நம்பிக்கை கொள்வதால் பாவமாக கருதப்பட்டது). எனவே இறைவாக்கினர் காத்தின் வழியாக இறைவன் மூன்று தண்டனைகளுள் ஒன்றை தேர்ந்தெடுக்கச் சொன்னபோது, தாவீது மீண்டும் இறையிரக்கத்தை வேண்டி இறைவனிடம் சரணடைகின்றார்: "நான் மிகவும் மனவேதனையுற்றுள்ளேன். ஆண்டவரது கையில் நாம் விழுவோம்; ஏனெனில் அவரது இரக்கம் பெரிது!" (2 சாமு 24:14). இவ்வாறு இறையிரக்கத்தை தனது வாழ்நாளில் பல வேளைகளில் துய்த்துணர்ந்தவர் அரசர் தாவீது.

### 8. நாடு திரும்பிய போது இறையிரக்கம்

இஸ்ரயேல் மக்கள் ஓர் அரசாக வாழ்ந்த காலம் மறைந்து சாலமோன் மற்றும் அவரது மகனின் குற்றங்களுக்காக இரண்டாகப் பிரிக்கப்பட்டது (காண். 1 அர 12). பின் மக்களின் வேற்று தெய்வ வழிபாடு மற்றும் மன்னர்களின் தவறுகளுக்காகவும் இந்த இரு அரசுகளும் அசீரியர்களுக்கும், பாபிலோனியர்களுக்கும் அடிமைகள் ஆக்கப்பட்டனர் (காண். 2 அரச 17; 25). ஆக பாவங்களுக்கு தண்டனையாக வந்தது அடிமைத்தனம். ஆனாலும் இறையிரக்கம் அவர்களை அப்படியே விட்டுவிடாது எனும் நம்பிக்கை செய்தியை இறைவாக்கினர்கள் மக்களுக்கு அறிவித்தனர்.

- ☜ “ஆண்டவர் இவ்வாறு கூறுகின்றார்: அடிமைத்தனத்தினின்று நான் யாக்கோபின் கூடாரங்களை திரும்பக் கொணர்வேன்; அவனுடைய உறைவிடங்கள்மீது நான் இரக்கம் காட்டுவேன்” (எரே 30:18).
- ☜ “ஆதலால் இரக்கத்துடன் எருசலேமுக்குத் திரும்பி வருகிறேன்,” என்கிறார் ஆண்டவர். ‘அங்கே என் இல்லம் கட்டப்படும்; எருசலேமின் மேல் அளவு நூல் பிடிக்கப்படும்’ என்கிறார் படைகளின் ஆண்டவர் (செக் 1:16).
- ☜ “இப்பொழுது அடிமைத்தனத்திலிருந்து அவர்களை விடுவிப்பேன்; அவர்கள்மீது இரக்கம் காட்டுவேன்” (எரே 33:26).
- ☜ “இப்போது நான் யாக்கோபை முன்னைய நன்னிலைக்குக் கொணர்வேன். இஸ்ரயேல் வீட்டார் அனைவர்மீதும் மனம் இரங்குவேன்” (எசே 39:25).
- ☜ “அவர்கள்மீது இரக்கம் கொண்டுள்ளதால் அவர்களை நான் திரும்பி வரச்செய்வேன்” (செக் 10:6). இறைவன் வாக்களித்தவாறே இஸ்ரயேலர் பாபிலோனிய சிறையிருப்பினின்று மீண்டும் வந்து எருசலேம் ஆலயத்தையும் மதில்களையும் கட்டியெழுப்பி, தங்கள் சமயத்தையும் புணரமைத்தார்கள் என்பதை நாம் எஸ்ரா நெகேமியா நூலில் காண்கின்றோம்.

**முடிவாக. . .**

முதல் மனிதர் முதல் இஸ்ரயேலரின் இறுதி வரலாற்று நூல் வரை இறைவன் மனுக்குலத்திற்கும், குறிப்பாக இஸ்ரயேலருக்கும் காட்டிய இரக்கம் வரலாறு முழுவதும் நிறைந்திருக்கின்றது. அதனால்தான் திருப்பாடல், ஆசிரியர் 136–ஆம் திருப்பாடலில் வரலாற்றில் இறைவன் செய்த அளப்பரும் செயல்களை குறிப்பிட்டு ஒவ்வொரு பாடல் வரியிலும், “என்றும் உள்ளது அவரது பேரன்பு” (திபா 136) என்று பதிவுசெய்கின்றார். இந்த இறையிரக்கம் இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இந்தப் பின்னணியில்தான் திருத்தந்தை பிரான்சிஸ் இவ்வாறு கூறுகின்றார்: “தூய திரித்துவத்தின் இதயத்திடமிருந்தும் கடவுளின் மறைபொருளின் ஆழத்திலிருந்தும் இரக்கம் எனும் பேராறு ஊற்றெடுத்து இடைவிடாமல் ஓடிக் கொண்டிருக்கிறது. அதிலிருந்து எவ்வளவு பேர் முகர்ந்து கொண்டாலும், இந்த ஆறு எப்போது வற்றாது. ஒருவர் தேவையில் இருக்கும் போதெல்லாம், அவர் இதை அணுகலாம். ஏனெனில் கடவுளின் இரக்கம் எப்போதும் முடிவதில்லை” (இறையிரக்கத்தின் திருமுகம், எண் 25).

**அருள்பணி. A. ஜான் பாப்டிஸ்ட்**